2017 ஜூன் 22]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் கோரிய இடங்களில்கூட ஏறத்தாழ 82 கடைகளை நாம் திறந்திருக்கின்றோம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்தபிறகு, இந்த 6 ஆண்டுகளில் 22 முழுநேரக் கடைகள், 60 பகுதிநேரக் கடைகள் என மொத்தம் 82 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொடுப்பதில் எந்தவித தங்குதடையும் இருக்கக் கூடாது என்பதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது உறுதியாக இருக்கிறது. மேலும், கடைக்குப் போகும்போது, எல்லாப் பொருட்களும் காலியாகி விடுகின்றன என்று சொன்னீர்கள். அது தவறான தகவல். நிச்சயமாக அதுபோன்று இல்லை. அதற்குத்தான், SMS வசதி எல்லாம் இப்போது வந்திருக்கிறது. இன்றைக்கு, மின்னணு தொழில்நுட்ப வசதி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, நியாய விலைக் கடைகளில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள 102 என்ற எண்ணுக்கு தொடர்புகொண்டால் போதும், அந்தக் கடையினுடைய stock position தெரிந்துவிடும். எனவே, என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டு உடனே நாம் அங்கு சென்று, வாங்கிவிடலாம். எனவே, யாரும் அலையக் கூடாது என்பதற்காகத்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுபோன்ற நடவடிக்கையை, இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத நடவடிக்கையை எடுத்திருப்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, விரிவாக, விளக்கமாகச் சொல்லிவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

63—

துணை மின் நிலையம்

***3220—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதி, ஆலந்தூர் 167—வது வட்டம், எஸ்.ஐ.பி. காலனியில் 110 K.V.A. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆலந்தூர் தொகுதி, எஸ்.ஐ.பி. காலனிக்கு இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் நங்கநல்லூர் பகுதியில் அமைந்துள்ள 33/11 K.V.A. துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருவதனால், துணை மின் நிலையம் அமைக்க அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியிலுள்ள எஸ்.ஐ.பி. காலனியைச் சுற்றிலும் ஸ்டேட் பேங்க் காலனி, வோல்டாஸ் காலனி, ஈஸ்வரன் காலனி, எம்.எம்.டி.சி. காலனி, கன்னிகா காலனி, கண்ணன் நகர், மூவரசம்பட்டு ஆகிய குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. இக்குடியிருப்புப் பகுதிகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பாக தனித் தனி குடியிருப்புகள் இருந்தன. இப்போது மக்கள் தொகை அதிகரித்ததன் காரணமாக, அக்குடியிருப்புகள் எல்லாம் அடுக்குமாடி குடியிருப்புகளாக மாறிவிட்டதனால் அப்பகுதிகளில் அதிக அளவில் மின்சாரம் தேவைப்படுகின்றது. அந்தக் குடியிருப்புப் பகுதிகளில் தற்போதுள்ள குறைந்த மின்னழுத்தத்தின் காரணமாக நோயாளிகளும், மாணவ, மாணவிகளும் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.*

மேலும், வீடுகளிலுள்ள மின் சாதனங்கள் பழுதாகிவிடுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திற்கொண்டு, எஸ்.ஐ.பி. காலனியில் 110 K.V.A. துணை மின் நிலையத்தை அவசியம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

2017 ஜூன் 22]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதியில்* 3x16 M.V. *அளவிலான மின்மாற்றிகள் இருக்கின்றன. அவற்றின் மொத்த மின் பளு 27.5* K.V.*தான் குறைந்த மின்னழுத்தம் காரணமாக பல்வேறு மின் சாதனங்கள் பழுதடைந்து விடுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதுபோன்ற நிலைமை அங்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, நங்கநல்லூர் பகுதியிலேயே மற்றொரு புதிய 33/11* K.V.A. *துணை மின் நிலையம் அமைப்பதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிருவாக அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், கடந்த 2010 ஆம் ஆண்டில் நங்கநல்லூர் பகுதியிலுள்ள எஸ்.ஐ.பி. காலனியைச் சுற்றியுள்ள குடியிருப்புகளில் வாழும் மக்கள், குறைந்த மின்னழுத்தம் இருப்பதால், அங்கு துணை மின் நிலையம் அமைத்திட வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். அதையேற்று எஸ்.ஐ.பி. காலனியில் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த 7* Ground *நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைத்திட திட்டமிட்டிருந்தோம். அந்நிலம் எஸ்.ஐ.பி. காலனி மாநகராட்சி பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட நிலம் என்பதால், துணை மின் நிலையம் அமைக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு மூவரசம்பட்டு பகுதியில் ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அங்கு அந்தத் துணை மின் நிலையத்தைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்து, மின் துறை அதிகாரிகள் சென்று ஆய்வு நடத்தியபிறகு, தற்போது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைத்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நங்கநல்லூர் பகுதியில் 7* Ground *நிலம் தனியார் ஆக்கிரமிப்பில் இருப்பதாகச் சொன்னது குறித்த விவரம் என்னவென்று தெரியவில்லை. அதை ஆய்வு செய்கின்றேன். மூவரசம்பட்டு பகுதியைப் பொறுத்தவரை, துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 33/11* K.V.A. *துணை மின் நிலையம் அமைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல், நங்கநல்லூர் பகுதியிலேயே 33/11* K.V.A. *துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உடனடியாக பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன. நேற்றைய தினம் நான் கூறியதுபோல், அந்தப் பகுதியிலே தகுந்த இடம் இருந்தால், மற்றொரு துணை மின் நிலையம்கூட அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைக் கண்டறிந்து சொல்வாரேயானால், அதிகாரிகள் வாயிலாக ஆய்வு செய்து, உடனடியாக அரசு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும். கார்ப்பரேசன் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை எடுக்க முடியாது என்பது நன்றாகத் தெரியும். சென்னையைப் பொறுத்தவரை, இடம் கிடைப்பதுதான் சிரமம். கோயம்பேடு பகுதியில் 400* K.V.A. *துணை மின் நிலையம் அமைத்தால், சென்னை முழுவதும் குறைந்த மின்னழுத்தம் இல்லாமல் இருக்கும் என்பதால், அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம். இடங்கள் பல்வேறு துறைகளின்கீழ் இருப்பதால், அந்தந்தத் துறைகளின் சார்பில் மின்சார வாரியத்திற்கு இடம் கொடுப்பதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், இடப் பற்றாக்குறை இருப்பதால்தான், இருக்கின்ற துணை மின் நிலையங்களையே* upgrade *செய்து கொண்டிருக்கிறோம். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பகுதியில், இன்னொரு துணை மின் நிலையம் அமைய இருப்பதால், எதிர்காலத்தில் அந்தப் பிரச்சினை இருக்காது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜூன் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பரமத்திவேலூர் தொகுதிக்குட்பட்ட, நல்லூர் துணை மின் நிலையம் 110/22* K.V.A. *ஆக உள்ளது. அதை 230/110* K.V.A. *ஆக தரம் உயர்த்த நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். அதை உடனடியாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு நல்லூர் பகுதி துணை மின் நிலையம் 110/22* K.V.A. *ஆக இருக்கிறது. அதை 230/110* K.V.A. *ஆகத் தரமுயர்த்துவதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார். அதை ஆய்வு செய்து, அங்கே மின் பளு எவ்வளவு இருக்கிறது என்பதற்கேற்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடம்பத்தூர் ஒன்றியத்தில், பாப்பரம்பாக்கம் துணை மின் நிலையமும், பூண்டி ஒன்றியத்தில் பட்டறைப்பெரும்புதூர் துணை மின் நிலையமும் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, ஓராண்டுகாலமாக பணிகள் நடைபெறாமல் அப்படியே இருக்கின்றன. மேலும், இன்றைக்கு திருவாலங்காடு பகுதியிலும், பூண்டி ஒன்றியப் பகுதியிலும், மின்னழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, உடனடியாகப் பணிகளைத் துவங்க நடவடிக்கை எடுக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்த இரண்டு பகுதிகளிலும் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த நிலம் மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தால், பணியைத் தொடங்குவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். அந்த இடம் ஒப்படைக்கப்படவில்லை, வேறு துறையில் இருக்கிறது என்று சொன்னால், அதை அரசின் மூலமாக மின்சார வாரியத்திற்கு மாற்றி, அந்தப் பணிகளை ஆரம்பித்து, விரைந்து முடிப்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

பொறியியல் கல்லூரி

***13157—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்குவது குறித்த கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.